DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.54/2025**
Prosecution Witness P.W.22

Name : **திரு. ஈஸ்வரன்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

A2 எதிரி ஆஜரில்லை, அவர்களுக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்

**நாள்: 29.06.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் சின்னமனூர் காவல் நிலையத்தில் நிலைய எழுத்தராக பணிபுரிந்த போது கடந்த 31.12.2024ம் தேதியன்று நான் அலுவலில் இருந்தபோது சின்னமனூர் காவல் நிலைய குற்ற எண் 349/2024, வழக்கின் புலன் விசாரணையை வீடியோ பதிவு செய்த வீடியோகிராபர் முத்துராஜ் என்பவருக்கு அதனை 6 பென்டிரைவ்களில் நகல் எடுத்து கொடுத்ததற்காக வீடியோகிராபர் முத்துராஜ் என்பவருக்கு ரூ.3,000/– பணம் வழங்கவும், மேலும் வழக்கின் புலன் விசாரணைக்காக புதிதாக 4 பென்டிரைவ்கள் வாங்குவதற்கு ரூ.1,000/– மும் காவல் ஆய்வாளர் அவர்களிடம் நிலைய இருப்பு வைப்புத் தொகையிலிருந்து எடுத்து கொடுத்தேன். காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் முதல்விசாரணையில் குறிப்பிட்டது போல் முத்துராஜா அவர்கள் வீடியோ பதிவு எடுத்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாதென்றால் சரிதான். பென்டிரைவ் வாங்கியது சம்பந்தமான ரசீதுகள் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். முத்துராஜாவிடம் பணம் கொடுத்தது சம்பந்தமான ரசீதுகள் எதையும் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

2. மொத்தம் 10 பென்டிரைவ் களுக்கு காவல் நிலையத்தில் வைத்து ரூ.4,000/– கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் முத்துராஜாவிடம் 6 பென்டிரைவ்களுக்கு ரூ.3 ஆயிரமும், 4 பென்டிரைவ்கள் வாங்க ரூ.1 ஆயிரமும் கொடுத்தேன். காவல் நிலைய கணக்கீடு ஆவணங்கள் சம்பந்தமாக காவல் ஆய்வாளரிடம் எந்தவித ஆவணமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பென்டிரைவ்–ன் மாடல், நிறம், என்ன கம்பெனி, எத்தனை GB போன்ற விபரங்கள் எனக்கு தெரியாதென்றால் சரிதான்.

3. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டது போல் எந்தவித செயலும் செய்யவில்லை என்றும், காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd/– SARAVANAKUMAR,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.